**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04–ஆம் நாள் சனிக் கிழமை

**அசல் வழக்கு எண்.20/2020**

**CNR. No. TNDG01-000626-2020**

பழனிவேல் ... வாதி

/எதிர்/

1. முருகன்

2. ராஜேந்திரன் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 24.02.2023–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. T. முத்தமிழ்செல்வன் அவர்கள் ஆஜராகியும், 1–ஆம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி. சுரேஷ் பாஸ்கரன் அவர்கள் ஏற்கனவே ஆஜராகியும், வா.சா.1–ன் குறுக்கு விசாரணை சமயம் 1–ஆம் பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், 2–ஆம் பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

வாதிக்கு, பிரதிவாதிகள் பிராது தொகை ரூ.20,30,250/–ஐயும், அசல் தொகை ரூ.15,00,000/–க்கு பிராது தேதி முதல் தொகை வசூலாகும்வரை 18% பின்வட்டி சேர்த்து செலுத்தி வைக்க வேண்டுமென கோரியும் மற்றும் செலவு தொகைக்கும் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு.

2. **<u>வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம் :</u>**

கடந்த 22.02.2018–ஆம் தேதி பிரதிவாதிகள், வாதியிடம் ரூ.15,00,000/–ஐ கடனாக பெற்றுக் கொண்டு மேற்படி கடனை 18% வட்டியுடன் திருப்பித் தருவதாக ஒப்புக்கொண்டு, தாவா புரோநோட்டை எழுதிக் கொடுத்தார்கள். ஒப்புக்கொண்டபடி பிரதிவாதிகள் தொகை எதுவும் பைசல் செய்யவில்லை. ஆகவே, 21.08.2019 அன்று வாதியின் தரப்பில் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதை பிரதிவாதிகள் 23.08.2019 அன்று பெற்றுக் கொண்டு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. ஆகவே, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>1–ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>** :

வாதியிடம் 1–ஆம் பிரதிவாதி கடன் எதுவும் பெறவில்லை. புரோநோட்டு எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் தரப்பில் போய் கேட்டபோது, வாதியின் பெரியம்மா மகன் திருப்பதியின் மனைவி ஜெயா தூண்டுதலின் பேரில் அறிவிப்பு அனுப்பப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். 1–ஆம் பிரதிவாதிக்கும், ஜெயாவிற்கும் குடும்பத்திற்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டதன் காரணமாக ஜெயாவின் தூண்டுதல் காரணமாக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். அத்துடன் 1–ஆம் பிரதிவாதி வீடு கட்டும் வகையில் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. 1–ஆம் பிரதிவாதி கடன் பெற்ற நபரிடம் தொகை செலுத்த முடியாத நிலையில் உள்ளார். ஆகவே, தன்னை நொடிப்பு நிலையராக அறிவிக்க வேண்டி நொடிப்பு மனு எண்.28/2019 தாக்கல் செய்துள்ளார். அதில் ஜெயாவும், வாதியும் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். நொடிப்பு மனு தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான் வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் விசாரணைக்காக வனையப்பட்டுள்ளன.

1. Whether the suit promissory note is true and genuine ?

2. Whether the suit promissory note is supported by consideration ?

3. Whether the plaintiff is entitled suit amount with interest ?

4. To what Relief ?

5. வாதியின் தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. <u>**எழுவினாக்கள் 1 முதல் 4–க்குரிய தீர்வு :**</u>

வாதியின் குறிப்பான வழக்கு யாதெனில், கடந்த 22.02.2018 அன்று பிரதிவாதிகள், வாதியிடம் ரூ.15,00,000/–ஐ கடனாக பெற்றுக் கொண்டு வா.சா.ஆ.1 தாவா புரோநோட்டை எழுதிக் கொடுத்ததாகவும், ஒப்புக்கொண்டபடி பிரதிவாதிகள் தொகையை பைசல் செய்யாத காரணத்தினால் வா.சா.ஆ.2 படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதை வா.சா.ஆ.3 படி பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டு தொகையை பைசல் செய்யவில்லை, பதிலும் அனுப்பவில்லை என வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1–ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் தாவா புரோநோட்டில் உள்ள கையொப்பத்தை 1–ஆம் பிரதிவாதி மறுத்துள்ளார். வாதியின் பெரியம்மா மகன் திருப்பதியின் மனைவி ஜெயாவிற்கும். 1–ஆம் பிரதிவாதிக்கும், குடும்பத்திற்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டதன் காரணமாக ஜெயாவின் தூண்டுதல் காரணமாக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாக 1–ஆம் பிரதிவாதி குறிப்பிட்டுள்ளார்.

7. வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக தாவா புரோநோட்டு வா.சா.ஆ.1 ஆகவும், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதியின் தரப்பில் பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆகவும், அதை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்ட அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.1–ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு வைக்கப்பட்ட நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை.

பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். வா.சா.1–ன் சாட்சியத்திற்கு மாறுபட்ட விதத்தில் சாட்சியம் எதுவும் இல்லை. வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் தரப்பில் பதில் அறிவிப்பு கொடுக்காத நிலையிலும், வா.சா.1–ஐ பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராத நிலையை பார்க்கும்போது தாவா புரோநோட்டை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டதாகத் தான் இந்நீதிமன்றம் கருதுகிறது. 1–ஆம் பிரதிவாதி தரப்பில், 1–ஆம் பிரதிவாதியை நொடித்தவர் என அறிவிக்கக் கோரி நொடிப்பு நிலை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நொடிப்பு நிலை மனு நகல் எதுவும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. நொடிப்பு நிலை மனுவில் ஏதேனும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக 1–ஆம் பிரதிவாதியின் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. 1–ஆம் பிரதிவாதி நொடித்தவர் என பிறப்பிக்கப்பட்ட உத்தரவு எதுவும் 1–ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.1 புரோநோட்டை பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி மறுக்காத நிலையில், வா.சா.ஆ.1 புரோநோட்டு உண்மையானது தான் எனவும், தக்க மறுபயன் கொண்டது எனவும், வாதிக்கு பிரதிவாதிகள் புரோநோட்டு கடனை வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டவர்கள் என இந்த எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவாக, தாவா தொகை ரூ.20,30,250/–ஐயும், அசல் தொகை ரூ.15,00,000/–க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% பின்வட்டியுடனும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் வரை 6% பின்வட்டியுடனும் பிரதிவாதிகள், வாதிக்கு செலுத்த வேண்டுமென செலவு தொகையுடன் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைத்திருத்தி இன்று 2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P SARAVANAN
Digitally signed by P SARAVANAN
Date: 2023.03.04 13:54:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

1. வா.சா.1 – பழனிவேல்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1, வா.சா.ஆ.1 | – | 22.02.2018–ஆம் தேதி வாதிக்கு பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த புரோநோட்டு. அசல். |
| 2. வா.சா.ஆ.2 | – | 21.08.2019–ஆம் தேதி வாதியின் தரப்பில் பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு. நகல். |
| 3. வா.சா.ஆ.3 | – | வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை. (2 எண்ணிக்கை.) |

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.03.04 13:55:04 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

Additional District Court,

Dindigul.

O.S. No.20/2020

Judgment : FAIR

Dated : 04.03.2023